"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 1. அரசினர் தீர்மானம்--தொடர்ச்சி

### (ஆ) விதிகள் 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று அறிமுகம் செய்யப்பட்ட இரண்டு சட்டமுன்வடிவுகளையும் இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்த அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1999) மற்றும் 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1999) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்"

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.



## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1999), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1999) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1999.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1999), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1999) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [1999 மார்ச் 30

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 7. இரங்கல் தீர்மானம்

### உறுப்பினர் திரு. எம். ஆண்டி அம்பலம் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சட்டப் பேரவை உறுப்பினர் திரு. எம். ஆண்டி அம்பலம் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.



1999 மார்ச் 30]

முற்பகல் 9-45

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1972 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை, மதுரை மாவட்டம், மேலூர் வடக்குத் தொகுதியிலிருந்தும், 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை, 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை, 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை, 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை, 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை திண்டுக்கல் மாவட்டம் நத்தம் தொகுதியிலிருந்தும், 1996 ஆம் ஆண்டிலிருந்து கடந்த 28-3-1999 வரை மீண்டும் அதே தொகுதியிலிருந்து ஆறாவது முறையாகவும், மொத்தம் ஏழு முறை தொடர்ந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற பெருமையுடையவரும், இப்பேரவையின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரும், இனிய பண்பும், அமைதியும், அடக்கமும் கொண்டு பணியாற்றியவருமான திரு. எம். ஆண்டி அம்பலம் அவர்கள், 28-3-1999 அன்று திடீரென மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரும் கொள்கிறது. அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது"

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

பேரவையினுடைய மாண்புமிகு உறுப்பினர் மறைந்த திரு. ஆண்டி அம்பலம் அவர்கள் 1972 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பெற்று இந்தச் சட்டமன்றத்திற்கு வந்தது முதலாக அவரோடு பழகுகிற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டிருக்கிறது. ஒரு நிலையான கொள்கை, ஒருவகையில் சமுதாயத்திலே பற்று, அதற்காகத் தொண்டு செய்கிற மனப்பான்மை இவற்றையெல்லாம் கொண்டு அந்த வட்டாரத்தினுடைய மக்களின் நன்மதிப்புக்கு உரியவராக, அவர்களுடைய பேராதரவைப் பெற்றவராக அவர் விளங்கி, பலமுறை தேர்தலிலே வெற்றி பெற்று சட்டமன்றத்திற்கு வந்திருக்கின்றார்கள். தொகுதியிலே உள்ள மக்களுக்குப் பணியாற்றுகின்ற முறையிலேயும் மிகுந்த கடமையுணர்ச்சியோடு அயராது பணியாற்றியவர். அவரைப் பொறுத்தவரையில், சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பாக ஆற்ற வேண்டிய பணிகள் மட்டும்தான் அவருடைய வாழ்க்கையிலே மிக முக்கியமாக அமைந்து. அந்த

வட்டாரம் முழுவதும் அவர் மிக நெருக்கமான உறவு கொண்டவராக இருந்தார்.

சட்டமன்றத் தொகுதிக்காக ஆற்ற வேண்டிய பணிகளில் அமைச்சர்களைப் பார்க்கிறபோதும், தன்னுடைய நியாயத்தை எடுத்துச் சொல்லி, அமைச்சர் செய்ய முடியும் என்றாலும் மகிழ்ச்சி அடைவார்; செய்ய முடியாத காரியம் என்றாலும் அதற்கும் மகிழ்ச்சி அடைவார். அதுபற்றி அவர் வருத்தப்படமாட்டார். ஏனென்றால் இயல்பாக ஆகக்கூடியது, ஆகமுடியாதது என்பதை உணர்கிறபோது அதை ஏற்றுக்கொண்டு சமூகத் தொண்டு ஆற்றிய ஒருவர் மக்கள் பணி ஆற்றிய ஒருவர் அவர். அவருடைய இழப்பு நம்முடைய சட்டமன்றப் பேரவைக்கும் இழப்பு, தொகுதி மக்களுக்கும் இழப்பு, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியிலே அவர் இடம் பெற்று அந்தக் கட்சியினுடைய உண்மையான பற்றாளர்களில் ஒருவராக இருந்து மறைந்த அந்தச் சூழ்நிலையில் தமிழ் மாநில காங்கிரசுக்கும் இழப்பு. எனவே அந்த இழப்பிற்காக எனது ஆழ்ந்த இரங்கலை முன்னவர் என்ற முறையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய குடும்பத்தாருக்கும் நம்முடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள நான் முன்வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆண்டி அம்பலம் அவர்கள் கடந்த 27 ஆண்டுக்காலமாக இந்தச் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்தவர். அவர் தோல்வியே கண்டறியாத தூய்மையான நல்ல அரசியல்வாதி. அவருடைய தொகுதியில், நேற்று அவருடைய இறப்பிற்காக நாங்கள் அங்கே சென்ற நேரத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள், லாரிகளிலும், வண்டிகளிலுமாக வந்து மிகப் பெரிய அனுதாபத்தைத் தெரிவித்த சூழ்நிலையில் இப்படி ஒரு மனிதரை--அரசியலில் இவ்வளவு தூய்மையோடு மக்களுடைய அன்பைப் பெற்றவராக இருக்கின்ற மனிதர்களை--மிக அரிதாகத்தான் பார்க்க முடியும் என்ற சூழ்நிலையை அங்கே ஏற்படுத்தியது.

முற்பகல் 9-50

27 ஆண்டுக்காலமாக சட்டமன்ற உறுப்பினராக இருந்தும்கூட இன்னும் தனக்காக என்று ஒரு சொந்த கார்கூட அவர் வாங்கிக்கொள்ளவில்லை என்பதை நேற்று அத்தனைபேரும் சொன்னார்கள். அதுமட்டுமல்லாமல் எந்த நகரத்திலேயும் அவருக்கு வீடு கிடையாது; பக்கத்தில் இருக்கிற நத்தத்திலேகூட சொந்தத்தில் ஓர் இடம்கூடக் கிடையாது. அவருடைய கிராமமாகிய பாலப்பநாயக்கன்பட்டியில்தான், அவருடைய சொந்தக் கிராமத்திலேதான் இதுவரை குடியிருந்திருக்கிறார். அப்படிப்பட்ட நல்ல அரசியல் தூய்மை உடையவர்; பொது மக்களோடு மிக அன்போடு பழகக்கூடியவர். எங்களுடைய தலைவர் அய்யா மூப்பனார் அவர்கள்மீது மிகுந்த பற்றும் பாசமும் கொண்டவர் என்பதற்கு ஒன்றிரண்டு உதாரணங்களைச் சொல்ல முடியும். 1978 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கு மிகப் பெரிய கடுமையான போட்டி வந்த நேரத்தில் அவரைக் கடத்திக்கொண்டு சென்றுவிட்டார்கள். கடத்திச் செல்கிறபோது ஓர் இடத்தில் ஜீப்பிலிருந்து குதித்து, தப்பித்து ஓடிவந்து, வாக்களித்து, தலைவர் மூப்பனார் அவர்களை நாடாளுமன்றத்திற்கு வெற்றிபெற வைத்தவர் என்கிற நினைவுகள் எல்லாம் எனக்கு இந்தநேரத்திலே வருகின்றன. அப்படிப்பட்ட நல்ல, ஒழுக்கமான, தன்னுடைய தலைமைமீது அசையாத பற்றுகொண்ட உண்மையான நல்ல மனிதர் நேற்று முன்தினம் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டாலும்கூட, அரசியலிலே இருப்பவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கை நல்ல எடுத்துக்காட்டாக அமையும். இப்படித்தான் வாழ வேண்டும் என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர், நத்தம் சட்டமன்றப் பேரவைத் தொகுதி உறுப்பினர் ஆண்டி அம்பலம் அவர்கள் நீண்ட அனுபவமிக்க சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். குறிப்பாக 7 தடவை சட்டமன்ற உறுப்பினராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த மன்றத்தினுடைய மாண்புகளையும், கண்ணியத்தையும் பாதுகாத்து, சிறந்த முறையிலே பணியாற்றி வந்தார். இங்கேயிருக்கக்கூடிய சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கெல்லாம் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்த அவருடைய பணி அந்தத் தொகுதி மக்களுக்குக் கிடைத்திருப்பது ஒரு சான்றாக அமைந்திருக்கிறதென்றால் அது மிகையாகாது. 7 தடவை தேர்தலில் வெற்றிபெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், தமிழ்நாட்டின் வரலாற்றிலே மிகச் சிறந்த

[திரு. ஜி. பழனிசாமி] [1999 மார்ச் 30

இடத்தை அந்த மக்களிடத்திலே அவர் பெற்றிருந்திருக்கிறார் என்பது தெரிகிறது.

நாங்கள் தங்கியிருக்கக்கூடிய பழைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய விடுதி அறையில் அவர் தங்கியிருக்கிறபோதுகூட, எந்த ஓர் ஆடம்பரமும் இல்லாமல் இருந்தார். அவர் ஒரு நீண்ட அனுபவமிக்க சட்டமன்றப் பேரவை உறுப்பினர். அவருக்குப் பின்னால், 4 பேர் போவார்கள், 4 பேர் வருவார்கள் என்பதைக் கூட பார்க்க முடியாது; தன்னந்தனியாகவே போவார்; தன்னந்தனியாகவே வருவார். அவர் தன்னடக்கத்திற்குரியவர். நான் அவரிடத்திலே ஒன்று கேட்பதுண்டு. என்றும் மாப்பிள்ளைபோல இருக்கிறீர்களே என்று கேட்பதுண்டு. ஏனென்றால் பட்டுடுத்தியே வருவார். எந்த நேரம் எடுத்துக்கொண்டாலும். அதற்கு அவர் 'எனக்குத் தலைவலி இருக்கிறது. அதுதான் நான் பட்டுடுத்துவதற்குக் காரணமாக இருக்கிறது. இல்லையென்றால் நான் கதர் ஆடையைத்தான் அணிவேன், என் தலைவலியைப் போக்குவதற்கு நான் பட்டுடுத்திக் கொண்டிருக்கிறேன்' என்று சொல்வார். உடனே நான் சொல்வேன் 'இந்தச் சபையிலே இரண்டு மாப்பிள்ளைகள் தொடர்ந்து வருகிறீர்கள். ஒன்று நீங்கள். மற்றொன்று நம்முடைய நாஞ்சிலார். காரணம் அவர்களும் பட்டுடுத்தி வருகிறார்கள்' என்று. நாங்கள் காரிலே வருகிறபோது இரண்டு பேரும் இவ்வாறு தமாஷாகப் பேசிக்கொண்டு வருவோம். அவ்வளவு இனிமையானவர். அவரிடத்திலே பேசிக்கொண்டு வருகிறபோது மிகவும் பக்குவமாகப் பேசுவார். சட்டமன்றத்தில் நடக்கின்ற விவாதங்களில் யாராவது தவறான வார்த்தைகளைப் பேசினால்-- அவையினுடைய முன்னுதாரணத்திற்கு மாறாக இருந்தால், அமைச்சர் பேசினாலும், மற்றவர்கள் பேசினாலும்--மிகத் துல்லியமாகச் சொல்வார். 'இந்தமாதிரி வார்த்தைகளையெல்லாம் பயன்படுத்தத் தேவையில்லை, நம்முடைய சபை அப்படிப்பட்ட சபை, அதனுடைய அருமை தெரியாமல் இப்படிப்பட்ட சபையிலே இன்னார் இப்படி நடந்துகொண்டார்கள்' என்று உன்னதமான ஒரு படிப்பினையை எனக்குத் தந்து கொண்டு வருவார். அப்படிப்பட்ட ஒரு நல்ல உறுப்பினரை இந்தச் சபை இழந்திருக்கிறது; அவர் சார்ந்திருக்கின்ற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி இழந்திருக்கிறது; அந்தக் குடும்பம் இழந்திருக்கிறது; அந்தத் தொகுதி மக்கள் இழந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.



1999 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

முற்பகல் 9-55

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் வடக்குத் தொகுதியிலிருந்து ஒருமுறையும், நத்தம் தொகுதியிலிருந்து தொடர்ந்து 6 முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவையில் பணியாற்றிய ஆண்டி அம்பலம் அவர்கள் 27-3-1999 அன்று இந்தச் சபை நடந்துகொண்டிருந்தபோது லாபியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். சபையிலே நடந்த சில சம்பவங்கள் குறித்து திரு. பழனிசாமி எடுத்துச் சொல்லியதைப் போல, நாங்கள் ஆதங்கப்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில், 'இதெல்லாம் சகஜம். இப்படித்தான் நடக்கும். இதையெல்லாம் பெரிதாக நினைத்துக்கொண்டிருந்தால் நீங்கள் இங்கே உறுப்பினராக இருக்க முடியாது' என்று எங்களுக்கு அவர் விளக்கம் சொல்லி, யதார்த்தமாக வாழ்ந்த ஒரு பெருமனிதராக, நாமெல்லாம் போற்றக்கூடிய ஒருவராக அவர்கள் திகழ்ந்தார்கள்.

நாம் அந்தப் பகுதிக்குச் சென்றால், நிச்சயம் திண்டுக்கல்லிலோ அல்லது நத்தத்திலோ அல்லது மதுரையிலோ அவரைக் காண முடியும். ஊரிலேயே அதிகமாக இருப்பார். நத்தம் தொகுதி கிராமங்கள் நிறைந்த ஒரு தொகுதியாகும். எனவே, கிராம மக்களின் உண்மையான பிரதிநிதியாகத் திகழ்ந்த ஆண்டி அம்பலம் அவர்கள், தான் எப்போதும் ஒரு கிராமவாசி என்பதை மறக்காமல், ஒரு கிராமவாசியாகவே தன்னை இனம் காட்டிக்கொள்வார்; அந்த மொழியிலேயே பேசுவார். அந்த வகையிலே அவர் தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருந்தார். 6 முறை ஒரே தொகுதியிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வருவது, அது எவ்வளவு தூரம் மக்களினுடைய அபிமானத்தைப் பெற்றிருந்தார்; அவர்களுடைய நல்ல ஆதரவைப் பெற்றிருந்தார் என்பதற்கு, அதுவே ஒரு விளக்கம். ஆர்ப்பாட்டம் இல்லாமல் அவர்கள் வாழ்ந்தார்கள். தன்னுடைய தொகுதி மக்களைப்பற்றி அதிகம் சிந்தித்தார்கள். தன்னை ஒரு நல்ல கட்சியின் தொண்டர் என்பதை எப்பொழுதும் தன்னுடைய சொல்லால், செயலால் அவர்கள் நிரூபித்து வந்தார்கள்.

இன்றைக்கு அவர் இல்லை. அதனால்தான், அவர் நேற்று இந்நேரம் மறைவுற்றார் என்று தெரிந்த உடனே அந்தக் கட்சித் தொண்டர்கள் எல்லாம் நத்தத்தை நோக்கி விரைந்து சென்றார்கள்.



22064.

அந்தக் கட்சியினுடைய தலைவர், மரியாதைக்குரிய ஐயா மூப்பனார் அவர்கள் விரைந்து சென்று இருக்கிறார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரும் மற்ற உறுப்பினர்கள் எல்லாம் அங்கே சென்று இருக்கிறார்கள். இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே எடுத்துச் சொல்லியதைப்போல, பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி தங்களுடைய கண்ணீர் அஞ்சலியை மறைந்த தலைவருக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். மறைந்தவர் மறைந்துவிட்டார். ஆனால், வாழக்கூடிய நமக்கு இது ஒரு படிப்பினையாக அமைகிறது. நாம் வேண்டுவது எல்லாம், இப்படி மக்கள் ஆதரவோடு பிரிந்து செல்ல வேண்டும். ஒன்றாக இருப்பது வேறு. நாம் மறைந்த பிறகும், நம் மக்கள் நம்மைப் பாராட்ட வேண்டும்; கண்ணீர் அஞ்சலி செலுத்த வேண்டும். அந்தக் கண்ணீர் இருக்கிறதே, அது செல்வத்தைவிட, மிகப் பெரிய செல்வம்; அதுதான் மக்களுடைய கண்ணீர். அந்த வகையிலே மிகப் பெரிய உயர்வு நிலையிலே வாழ்ந்த ஆண்டி அம்பலம் அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து இருக்கிறார்கள். நாம் அதுபற்றி மிகுந்த துயர் கொண்டிருக்கிறோம். தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைமைக்கும், அந்தக் கட்சியினுடைய தொண்டர்களுக்கும், மறைந்த அவருடைய குடும்பத்தினருக்கும் நம்முடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த அவை அப்பேர்ப்பட்ட உறுப்பினர்களை எப்போதும் நெஞ்சில் நிறுத்திப் பாராட்டத் தவறியது இல்லை என்ற வகையில், அவருக்கு இந்திய தேசிய லீக்கின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்; ஐயா மூப்பனார் அவர்களுக்கும், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மூலமாக அந்தத் தொகுதி மக்களுக்கும், அந்தக் கட்சிக்கும் நான் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த இரங்கல் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு உள்ளபடியே வேதனை அடைகிறோம். ஐயா, அண்ணார் ஆண்டி அம்பலம் 19-5-1927-லே ஏழை விவசாயக் குடும்பத்திலே பிறந்து, தன்னுடைய வாலிபப் பருவத்திலே பெருந்தலைவர் காமராசரோடு இருந்து இன்று இருக்கக்கூடிய ஐயா மூப்பனார் வரை தன்னுடைய பணியை மிகச் சிறப்பாகச் செய்த வெற்றிகரமான ஒரு வெற்றிப் புருஷன் இன்று



நம்மைவிட்டு மறைந்து விட்டார். 1971 முதல் 7 முறை வெற்றி பெற்று, கிட்டத்தட்ட 28 ஆண்டுக்காலம் இந்த அவையிலே சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். அதுமட்டுமல்ல. ஊராட்சி மன்றத் தலைவராகவும், மதுரை--காமராசர் பல்கலைக்கழகத்தின் செனட் உறுப்பினராகவும், அறங்காவலர் குழுத் தலைவராகவும், இரயில்வே ஆலோசனைக் குழுத் தலைவராகவும், அதையெல்லாம்விட அவர்களுடைய கட்சித் தலைவர் மூப்பனாருடைய நெஞ்சம் நிறைந்தவராகவும், நத்தம் தொகுதி மக்களினுடைய பேராதரவினைப் பெற்றவராகவும், இந்த அவையிலே கண்ணியத்தைக் கடைப்பிடித்து, இந்த அவை எப்படியெல்லாம் கண்ணியத்தோடு விளங்க வேண்டும் என்பதனைப் பலருக்கு பல வகையிலே எடுத்து உரைத்தவராகவும் திகழ்ந்தார். மற்ற அரசியல்வாதிகளும் அவரைப் பார்த்துக் கற்றுக்கொள்ளக்கூடிய அளவிற்கு ஏழ்மையும், தூய்மையும் நிறைந்த ஐயா ஆண்டி அம்பலம் அவர்களின் குடும்பம் இன்று நம்முடைய அவையை, முதலமைச்சரை நம்பியிருக்கிறது. ஐயா ஆண்டி அம்பலம் குடும்பத்தாருக்கு நம்முடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய குடும்பம் மிக ஏழ்மையான குடும்பம். அவரை நம்பி 7 குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு நம்மாலான உதவி, குறைந்தது 5 இலட்சம் ரூபாயாவது இந்த அரசு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அன்னாருடைய குடும்பத்தாருக்கு எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இரங்கலைத் தெரிவித்து, என்னோடு எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அத்துணை பேர்களின் இரங்கலையும் தெரிவித்து அமர்கிறேன்.

*முற்பகல் 10.00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருமைச் சகோதரர் ஆண்டி அம்பலம் அவர்கள் நேற்றைக்கு மறைவுற்றார் என்கிற செய்தியைக் கேட்டு, மிகுந்த வருத்தத்தினையும், துயரத்தினையும் அடைந்தவர்களிலே நானும் ஒருவன். காரணம் அவர்கள் 1972 ஆம் ஆண்டு முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்திலிருந்து அவரை நான் நன்கு அறிவேன். பிரிக்கப்படாத மதுரை மாவட்டத்திலே, நாங்களெல்லாம் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே ஒன்றாகக் கலந்துகொள்கிற ஒரு வாய்ப்பினைப் பெற்றவர்கள்.

அதோடு நான் இருக்கின்ற என்னுடைய சொந்தக் கிராமத்திலே ஆண்டி அம்பலம் அவர்களுக்கு நெருங்கிய உறவினர்கள் பலர் இருந்தார்கள். அவர் அடிக்கடி அந்த உறவினர்களைப் பார்ப்பதற்கு வந்து செல்கின்ற நேரத்திலே, மிகுந்த பண்பாடோடும், பக்குவத்தோடும் பழகக்கூடிய ஒரு சிறந்த பண்பாளர். எளிமையோடு இருப்பவர் என்று சொன்னால், அதற்கு எடுத்துக்காட்டாக, உதாரணமாக விளங்கியவர் அவர். கிராமத்திலே ஒன்றைக் கூறுவார்கள். ஒரு மனிதன் நல்லவன் என்று தெரிந்துகொள்ள வேண்டுமானால் அவர் இறக்கின்ற நேரத்திலே மக்களிடத்திலே இருக்கின்ற அந்தத் துயர உணர்வை, அவர்கள் கூடுகின்ற அந்த நிலையைப் பார்த்துத்தான். இவன் வாழ்ந்திருந்த காலத்திலே நல்லவனாக வாழ்ந்திருக்கிறான் என்பதை முடிவு செய்ய முடியும் என்று பொதுவாக கிராமங்களிலே சொல்வதுண்டு. இதை நேற்றைக்கு அவருடைய கிராமத்திலே பார்க்க முடிந்தது. அந்த அளவுக்கு அவரிடத்திலே அந்த மக்கள் பற்றுதலும், பாசமும் வைத்திருந்த நிலையைப் பார்க்கும்போது, அவர் எவ்வளவு நல்லவராக, தூய்மை வாய்ந்தவராக, மக்கள் மனதிலே நிரம்பியவராக வாழ்ந்திருக்கிறார் என்பதை உணர முடிந்தது. அப்படிப்பட்ட நல்லவர் அவர். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப்போல சொந்தத்திலே ஒரு கார்கூட வைத்துக்கொள்ளமுடியாத அளவுக்கு, தன்னுடைய அரசியல் வாழ்விலே 28 ஆண்டுக்காலம் ஈடுபட்டிருந்தார்கள் என்று நினைக்கும்போது, அது அவருடைய அரசியல் தூய்மையை வெளிக்கொணர்கிற ஒரு நிலை என்பதை நாம் உணர முடிகிறது.

அவருக்குப் பெரிய குடும்பம் இருக்கின்றது. அவர்களுக்குப் பிள்ளைகளும், மகள்களும் நிறைய இருக்கின்றார்கள். அவர்கள் தற்போது கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் குடும்பத்தில் படித்தவர் யாரேனும் இருந்தால், நமது முதல்வர் அவர்கள் ஏதாவது வேலைவாய்ப்பைத் தந்து அவர்களுக்கு உதவிடவும், அவர்களுடைய குடும்பத்தினருக்கு முடிந்த அளவிற்கு உதவி செய்திடவும், அதைப்போல அந்தக் கட்சியினுடைய தலைவராக இருக்கின்ற தலைவர் மூப்பனார் அவர்களும் முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

அவர் இங்கே விடுதியிலே தங்கி இருக்கின்ற நேரத்திலே, என்னுடைய அறைக்கு அடுத்த அறையிலே இருப்பார். எனக்கு



அடுத்த அறை அவருடைய அறை. ஒவ்வொரு நாளும் அவரைப் பார்ப்பதற்கு அவர் தொகுதியிலேயிருந்து நிறைய பேர் வருவார்கள். இந்தச் சட்டமன்றம் முடிந்தவுடனே நாங்களெல்லாம் விடுதிக்குச் சென்று சற்று ஓய்வாக இருக்கின்ற நேரத்திலேகூட, அவர் மதிய உணவைக்கூட மறுத்துவிட்டு, அந்த மக்களுடன் சென்று ஒவ்வொரு அமைச்சரையும், அலுவலரையும் சந்தித்து, அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு அவருடைய வயதைக்கூட பொருட்படுத்தாத அளவிற்கு ஆறு மணி வரை எல்லா இடங்களுக்கும் சென்றுவிட்டு வருவார். அப்படிப்பட்ட உயர்ந்த பண்பு படைத்த அவர் காலமானது உண்மையிலேயே அவரைச் சார்ந்திருக்கிற இயக்கத்திற்கும், அவரை நம்பியிருந்த அவரது குடும்பத்தினருக்கும் மாபெரும் இழப்பு என்பதைச் சொல்லி, என்னுடைய அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பிலே அவருக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆண்டி அம்பலம் அவர்கள் மாரடைப்பால் இயற்கை எய்தினார் என்கிற செய்தி நம் அனைவருக்கும் அதிர்ச்சியையும், வேதனையையும் தரத்தக்கதாகும். மேலூர் வடக்குத் தொகுதியிலிருந்து ஒரு முறையும், ஆறு முறை நத்தம் தொகுதியிலேயிருந்தும் தொடர்ந்து வெற்றி பெற்ற அவர் அந்தத் தொகுதி மக்களின் பேரன்புக்கு உரியவராகத் திகழ்ந்தார். பழனி தொகுதியிலே ஒருமுறை இடைத்தேர்தல் நடந்தபோது அவரையும் அழைத்துக்கொண்டு, இரண்டு நாட்கள் அந்தத் தொகுதி முழுவதும் பிரச்சாரத்திற்குப் போகிற சூழ்நிலை ஏற்பட்டபோது, கிராமிய பாணியிலே நகைச்சுவை உணர்வோடு, அவர் பேசுகிற பேச்சைக் கேட்டு அந்தத் தொகுதியிலிருந்த மக்களெல்லாம் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தார்கள், அவருக்கு எந்த அளவு மரியாதை தந்தார்கள் என்பதை நேரடியாகக் காண முடிந்தது. மிகவும் எளிமையானவர். மிகவும் பாசத்தோடு பழகக்கூடிய இனிமையான சுபாவம் கொண்டவர். எனவே, அவருடைய மறைவு என்பது அவருடைய குடும்பத்திற்கு பேரிழப்பு ஆகும். அன்னாருடைய மறைவுக்கு எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு, அவரை இழந்து வாடுகின்ற அவருடைய

குடும்பத்தினருக்கும், அவர் சார்ந்திருந்த இயக்கமான தமிழ் மாநில காங்கிரசுக்கும், தொடர்ந்து அவரைத் தேர்ந்தெடுத்த, வெற்றி பெறச் செய்த அந்தத் தொகுதி மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதையொட்டி மாண்புமிகு பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய பரிசீலனைக்காக ஒரு சிறிய வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். இந்த மன்றத்திலே இந்த மூன்று ஆண்டுகளில் மாண்புமிகு அமைச்சர் தங்கபாண்டியனிலிருந்து, கொறடா பெரியண்ணனிலிருந்து, 5 சட்டமன்ற உறுப்பினர்களை இழந்திருக்கிறோம். அவர்கள் இறந்தால் அவர்களுடைய குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் தரப்படுகிறது. அரசு ஊழியர் இறந்தால் அதற்கும் ஒரு இலட்சம் ரூபாய் தரப்படுகிறது என்பது உண்மைதான். அதேநேரத்தில் எம்.எல்.ஏ.க்களை எடுத்துக் கொண்டால், எம்.எல்.ஏ. என்பவர் மக்களுடைய பிரதிநிதி. அவர்களைக் குறைவாகச் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. தாசில்தார், R.D.O. என்கிறவர்களோடு நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தால்கூட, அவர்கள் யாராவது இயற்கை எய்தினால் ஒரு இலட்சம் ரூபாய் அவர்களுக்குக் கிடைக்கிறது என்றாலும், அவர்கள் மறைவுக்குப் பின்னாலே கிடைக்கிற மற்ற benefits—Gratuity எல்லாம் சேர்த்துப் பார்க்கிறபோது, ஏறக்குறைய 10 ஆயிரம் ரூபாய் வரைக்கும் மாதத்திற்கு benefits கிடைக்கும். ஆனால் எம்.எல்.ஏ. என்கிறபோது, அந்தத் தொகுதியில், அந்த வட்டார மக்களுடைய பாத்திரத்திற்கும், மரியாதைக்கும் உரிய செல்வாக்குள்ள குடும்பமாக அவருடைய குடும்பம் திகழ்கிறது. அமைச்சர்கள் எல்லாம் இருக்கிறார்கள், கொறடா இருக்கிறார் என்று சொன்னால் அந்த மாவட்டத்திலே, அந்தத் தொகுதியிலே மிகப் பெரிய செல்வாக்கோடு இருக்கின்ற குடும்பங்களாக இருக்கிறார்கள். இப்படி திடீர் என்று இயற்கை எய்துகின்றபோது அந்தக் குடும்பமே சீரழிந்து போகின்ற ஒரு சூழல் ஏற்படுகிறது. அவருக்குப் பின்னாலே, அந்தக் குடும்பத்தில் யாரும் அவர் பெற்றிருந்த செல்வாக்கோடு, பொது வாழ்க்கையிலே உடனடியாகத் திகழ்ந்து விடுவதில்லை. இவற்றையெல்லாம் மனதில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலித்து, இந்த ஒரு இலட்சம் ரூபாய் என்பதை--இவருக்கு மட்டும் அல்ல, Retrospective effect-ஆக இந்த 3 ஆண்டுகளிலே என்னுடைய அறைக்கு அடுத்த அறையிலே பணியாற்றி



மறைந்தார்களோ அவர்களுடைய குடும்பத்திற்கெல்லாம்--ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்ற ஒரு பொதுவான வேண்டுகோளை இந்த நேரத்திலே சொல்லி, ஆண்டி அம்பலம் அவர்களுடைய மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்து அமைகிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றத்தில் நீண்டகாலமாக உறுப்பினராக இருந்து திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தொகுதி மக்களுடைய பெருவாரியான செல்வாக்கைப் பெற்று மக்களுடைய நலனில் அக்கறையோடு செயல்பட்டு வந்த நண்பர் ஆண்டி அம்பலம் அவர்களுடைய மறைவு என்பது அந்தத் தொகுதி மக்களுக்கு மட்டுமல்ல, அவர் சார்ந்திருந்த தமிழ் மாநில காங்கிரசுக்கும் ஒரு பேரிழப்பாகும். ஏற்கெனவே, நான் 6, 7 வருடங்களாக அவரைச் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றிருந்தேன். சமீபத்தில் இரண்டு முறை சில விஷயங்கள் குறித்துப் பேச அவருடைய அறைக்குச் சென்றபோது அவருடைய பழகும் தன்மை மிகவும் பண்பாடான நிலையில் இருந்ததை அறிய முடிந்தது. நேற்றைக்கு முன்தினம் காலை 5.30 மணியளவில் அவர் தங்கியிருந்த விடுதி அறைக்கு முன்னால் நான் செல்கின்றபோது இரண்டு ஊழியர்கள் சொன்னார்கள். சற்று நேரத்திற்கு முன்னால்தான் தொலைபேசியிலே தகவல் வந்தது; நண்பர் ஆண்டி அம்பலம் மறைந்துவிட்டார் என்று சொன்னார்கள். அதை நம்புவதற்கே எனக்குக் கஷ்டமாக இருந்தது. அப்படிப்பட்ட நீண்டகால உறுப்பினரை இழந்து தவிக்கின்ற அவர் சார்ந்திருக்கின்ற இயக்கத்திற்கும், அதைப்போல ஒரு பெரிய குடும்பத்தினுடைய பொறுப்பை வகித்து வந்த அவருடைய குடும்பத்தாருக்கும் நான் சார்ந்திருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலைச் சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஆண்டி அம்பலம் அவர்கள் 28 ஆண்டுகள் சட்டமன்ற

உறுப்பினராக இருந்து தன்னுடைய 72-வது வயதில் இறைவனடி சேர்ந்திருக்கின்றார். அவருடைய இழப்பு நம்முடைய சட்டமன்றத்திற்குப் பெரும் இழப்பாகும். அந்தத் தொகுதி மக்களுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும், தமிழ் மாநில காங்கிரசுக்கும் அவருடைய இழப்பு பெரும் இழப்பாக அமைந்துள்ளது. சாதாரணமாக கீதையிலே அடைப்புக் குறிகளுக்குள் சொல்லுவார்கள். 'கடமையைச் செய், பலனை எதிர்பார்க்காதே' என்று. அந்த அடிப்படையில் தன்னுடைய கடமையைச் சிறந்த முறையிலே செயலாற்றி, தானும் வாழ்ந்து, மற்றவர்களையும் வாழ வைக்க வேண்டும் என்ற அடிப்படையில் மட்டும் தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர் அவர். தன்னுடைய குடும்பத்திற்கென்று ஏதேனும் சம்பாதிக்க வேண்டும் என்ற சிந்தனையோடு இல்லாமல் வாழ்ந்த பெரியவர் அவர். சாதாரணமாக ஒரு மனிதனுடைய கடைசி காலம் என்பது, தானும் துன்பப்பட்டு, தன்னைச் சார்ந்தவர்களையும் துன்பப்படுத்தி மறைகின்ற வகையில் பலருடைய கடைசி காலம் அமைவதுண்டு. ஆனால் அப்படி இல்லாமல், நினைத்த உடனேயே மறைவது போன்று நெஞ்சுவலி என்று சொல்லி சில நிமிடங்களில் தன்னுடைய வாழ்க்கை முடியும் அளவுக்கு யாரையும் துன்பப்படுத்தாமல், தன்னையும் துன்பப்படுத்திக்கொள்ளாமல் தன்னுடைய வாழ்க்கையை முடித்துக்கொண்டவர் அவர். நல்ல தேச பக்தியும், தெய்வ பக்தியும் கொண்டவர். பண்பாளர். அரசியல் ஒழுக்கம் உள்ளவர். என்னைப் பார்க்கும்போதெல்லாம் தம்பி என்று அழைப்பார். இன்னொன்று, "தம்பி, நீ பேசுவதெல்லாம் நல்ல விஷயம்தான். நல்ல கருத்துதான்; எனக்கும் அப்படியெல்லாம் பேச வேண்டும் என்ற எண்ணம் உண்டு. ஆனால், என்னால் முடியாது" என்று சொல்வார். அப்பொழுது நான் அவரிடம் தர்க்கம் பண்ணுவேன்; "ஏன் முடியாது" என்று பல காரணங்களைச் சொல்லி அவரிடம் தர்க்கம் பண்ணுவேன். அப்போது சொல்வார், "நாங்கள் அப்படி வளர்ந்துவிட்டோம், தம்பி. எனக்கு அப்படியெல்லாம் முடியாது. உங்களுடைய வளர்ப்பு, உங்களுடைய அரசியல், அதெல்லாம் வேறு பாணி. இவை வரவேற்கத்தக்க அம்சங்கள்" என்று சொல்லி என்னைப் பலமுறை ஊக்கப்படுத்தியிருக்கிறார். அந்த அளவிற்கு அவர் நேர்மையானதொரு பண்பாளர் என்று சொன்னால் அது மிகையாகாது. எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னதைப்போன்று, தனக்கென்று வாழாத ஒரு பெருந்தகை.



அவருடைய குடும்பத்தில் இவர் பெரியவர், மூத்தவர். இத்தனை ஆண்டுகளாகச் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார் என்ற அளவிற்கு, அவர் எப்படி கௌரவத்தோடு வாழ்ந்தாரோ அதேபோல, அவருடைய குடும்பமும் பிற்காலத்தில், இத்தனை ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவருடைய குடும்பம் என்று போற்றக்கூடிய வகையில் சீரும் சிறப்புமாக வாழ வேண்டும். அதற்குண்டான வழிவகைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன். அந்தக் குடும்பத்திற்குண்டான வாய்ப்புகளையும் வசதிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்டாயம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவருடைய ஆன்மா இறைவனடி சேர பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் எல்லாம் வல்ல அன்னை பாரதத் தாயை வேண்டி அமைகின்றேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, We have lost one of the finest and honest gentlemen, Thiru Andi Ambalam, Natham Constituency M.L.A., of our Assembly. Whenever I saw him in the old hostel—I am also living in the old hostel—he always used to come in a trim manner with silk shirt and sulka. It showed that his mind was always trim. That is why he was able to win from the Natham constituency for 6 continuous terms. In 1972-76, when he was a Member, I was also a Member in this House. At that time I used to meet him. He was one of the finest gentlemen. Actually T.M.C. has lost a finest gentleman. He was an asset to the party. At the same time, it is a great loss to the Natham Constituency people because he was amenable to everybody. I used to see lot of people in his room. He used to go with the people to meet the officers to redress their grievances.

On behalf of Janata Dal, I convey my heartfelt condolences to the grieved family.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், ஒரு தேசியவாதியாகத் திகழ்ந்தவருமான பெரியவர் ஆண்டி அம்பலம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு நான் வேதனையும் அதிர்ச்சியும் அடைந்தேன். 72 வயதிலேயும் 25 வயது இளைஞரைப்போல நடமாடியவர் என்பதை இந்த அவையினுடைய உறுப்பினர்கள் அனைவரும் அறிவோம். காட்சிக்கு எளியவராக, கனிவுடன் பழகக்கூடியவராக அவர் திகழ்ந்தார். ஒரு கிராமவாசியாக இல்லாமல், கிராமத்தில் வாழ்வதையே அவருடைய குறிக்கோளாகக் கொண்டு, ஒரு கிராமவாதியாகத் திகழ்ந்திருக்கிறார்: நமக்கெல்லாம் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்திருக்கிறார். அவருடைய மரணத்தால் வாடும் அவருடைய குடும்பத்திற்கும், இயக்கத்திற்கும் புதிய தமிழகத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அன்னாரின் குடும்பத்திற்கு, பிற உறுப்பினர்கள் வலியுறுத்தியதைப்போலவே, குறைந்தது 5 இலட்ச ரூபாய் இழப்பீடு கொடுக்கும்படி கேட்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் சட்டப் பேரவை உறுப்பினர் மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய பெரியவர் ஆண்டி அம்பலம் அவர்களுடைய மறைவிற்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். எளியவராக, பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய வாரிசு என்று சொல்லக்கூடிய அளவுக்கு மிகச் சிறந்த மக்கள் தொண்டராகத் திகழ்ந்து விளங்கிய அந்தப் பெரியவருடைய இழப்பானது அவருடைய தொகுதிக்கு மட்டுமல்லாமல் இந்த நாட்டுக்கே ஒரு பெரிய இழப்பு என்பதை இந்தநேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். காந்தியவாதியாகத் திகழ்ந்து, இப்போது கிராமத்து மக்களெல்லாம், ஒடுக்கப்பட்ட மக்கள் எல்லாம், அந்தப் பகுதியிலே மிக அளவுகடந்த முறையிலே அவரை நேசிக்கத்தக்க அளவுக்கு வாழ்ந்து காட்டி, அவர்களுக்கெல்லாம உற்ற துணைவராக வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள். எனவே அவரை இழந்து வாடும்





அவருடைய குடும்பத்தாருக்கும் அவருடைய தொகுதி மக்களுக்கும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, அன்னாருடைய குடும்பத்திற்கு ஏனைய உறுப்பினர்கள் வலியுறுத்தியதைப்போல ஒரு தக்க பாதுகாப்பு, குடும்ப நிதியாக 5 இலட்சம் ரூபாயை வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் எதிர்வரிசையில் எந்நேரமும் என்னுடைய பார்வையிலே படுகின்ற அளவிற்கு அமர்ந்திருந்த அன்புக்குரிய நண்பரும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய சட்டப் பேரவை உறுப்பினருமான ஆண்டி அம்பலம் அவர்கள் மறைந்த செய்தி நேற்று காலையிலே கிடைத்தவுடன் நாம் அனைவருமே பதறிப் போனோம். அவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றுமுள்ள கட்சிகளின் தலைவர்களும் எடுத்துக்காட்டியதைப்போல, அடக்கத்தின் மொத்த உருவமாக, நல்ல இயல்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்தவர் மறைந்த ஆண்டி அம்பலம் அவர்கள் ஆவார்கள். ஒரு விவசாயக் குடும்பத்திலே பிறந்து எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துக்காட்டியதைப் போல, அவருடைய பெயருக்கு ஏற்றாற்போல ஓர் ஆண்டியாகவே அரசியலிலே வாழ்ந்து காட்டிய பெருமை அவருக்கு உண்டு.

தொகுதி மக்களிடத்திலே அவர் சார்ந்திருந்த கட்சிக்கு உள்ள செல்வாக்கைவிட தனிப்பட்ட முறையிலே அவருக்குள்ள செல்வாக்கு கட்சிக்கும் பயன்பட்டது என்பதை அவருடைய கட்சியிலே உள்ளவர்களே மறுக்கமாட்டார்கள். அந்த அளவுக்குத் தனிப்பெரும் செல்வாக்கோடு அந்தத் தொகுதியிலே வாழ்ந்தவர். இன்னமும் அந்தத் தொகுதி மக்களுடைய நெஞ்சங்களிலே மறையாமல் வாழ்ந்து கொண்டிருப்பவர் ஆண்டி அம்பலம் அவர்கள் ஆவார்கள்.

அவர் அரசியலிலே மாத்திரமல்லாமல், ஆன்மீகத் துறையிலும், சமுதாயத் துறையிலும் ஆழ்ந்த பற்று கொண்டு அந்தப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட பெருந்தகை ஆவார்கள். என்னைச் சந்திக்கின்ற நேரத்தில் எல்லாம் ஒரு முறையீடு--தொகுதியைப் பற்றிய

நிலைகளை விவரித்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்கின்ற அளவிலே--வழங்குவது அவருடைய வாடிக்கை. அவற்றில் பலவற்றை அரசின் சார்பில் நிறைவேற்றிக் கொடுத்தாலும்கூட, பலவற்றை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இருந்தாலும்கூட அதற்கான விளக்கங்களை அளிக்கின்ற நேரத்திலே, அவை முன்னவர் குறிப்பிட்டதைப்போல, அதுகேட்டு ஆறுதல் அடையக்கூடியவர்; அதை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்; அதற்காக சற்றும் சீற்றம் கொள்ளாதவர்; வருந்தாதவர். அவர் இளமைக் காலத்திலேயிருந்து துடிப்பான ஓர் இளைஞராகத் திகழ்ந்து பல்வேறு தேகப் பயிற்சிகள், விளையாட்டுக்கள் இவற்றிலே ஈடுபாடு கொண்டு உடல் ஆரோக்கியத்தையும் நல்ல முறையிலே பாதுகாத்து வந்தவர்தான். எனினும் திடீரென்று இயற்கை அவரை நம்மிடமிருந்து பிரித்துவிட்டது. ஒரு பெரிய குடும்பம் அவருடைய குடும்பம் என்பதை இங்கு உள்ளவர்கள் எல்லாம் எடுத்துக் கூறினார்கள்.

முற்பகல் 10-25

நல்ல எளிமை, அதே அளவுக்குப் பழகுவதிலே இனிமை. இந்தச் சட்டமன்றத்திலே என்றைக்காவது ஒரு நாள் உரத்த குரலிலே பேசி யாரையும் புண்படுத்தினார் என்ற நிலை என்றைக்குமே இல்லை என்ற அளவிற்கு. அவர் தொடர்ந்து 25 ஆண்டுக் காலத்திற்கு மேலாக இந்த அவையிலே பணியாற்றினாலும்கூட, அவரோடு இணைந்து பணியாற்றுகின்ற அந்த வாய்ப்பைப் பெற்றுள்ள நாங்கள் எல்லாம்கூட, அத்தகைய ஒரு சூழ்நிலை என்றைக்கும் உருவானதைக் கண்டதில்லை. அந்த அளவிற்கு உங்களுடைய உள்ளம் எல்லாம் கவர்ந்த ஒரு பெரியவர் மறைந்த ஆண்டி அம்பலம் அவர்கள் ஆவார்கள்.

அவருடைய குடும்பத்தைப் பற்றியும், அதற்குச் செய்ய வேண்டிய உதவிகளைப் பற்றியும் இங்கே எடுத்துக் கூறப்பட்டது. நான் மாண்புமிகு உறுப்பினர்களை எல்லாம் கேட்டுக்கொள்வேன். இதுபோன்ற ஒரு பெரிய துக்க சம்பவம் நடைபெற்று, அந்தத் தலைவருக்காக இரங்கல் தீர்மானம் நிறைவேற்றுகிற நேரத்தில், அவரைப் பற்றிய குறிப்புகள்தான் அவைக் குறிப்பிலும், ஏடுகளிலும், ஏறவேண்டுமேயல்லாமல், வேறு--அவை சாராத வேறு--குறிப்புகள், அவருடைய குடும்பத்தைப் பற்றி, நிதியுதவி போன்ற கோரிக்கைகளை எழுப்பினால், ஆண்டி அம்பலம் என்ற ஒரு பெரியவருடைய



மறைவு, மறைந்துபோய், திசை திருப்பப்பட்டு, வேறு திசையிலே சென்று விடும் என்கின்ற ஆதங்கம் எனக்கு உண்டு. எனவே இந்த மாமன்றத்திலே பணியாற்றுகின்ற உறுப்பினர்களுடைய மறைவு, அதன் காரணமாக எழுகின்ற சூழ்நிலை, இவற்றைப் பற்றியெல்லாம் பேச, முடிவுகளை எடுக்க, மாநில சட்டமன்ற மானியம் வருகின்ற நேரத்தில் பொதுவாக அதைப்பற்றிப் பேசலாம் என்ற அந்தக் கருத்தை மாத்திரம் சொல்லி--இல்லையேல், பலரும் எடுத்துச் சொன்ன கருத்தை நான் அலட்சியப்படுத்திவிட்டேனோ என்று யாரும் கருதக்கூடாது என்பதற்காக, இன்றைக்கு ஒரே தீர்மானம்--ஆண்டி அம்பலம் அவர்களுடைய மறைவுக்காக நிறைவேற்றிய அனுதாபத் தீர்மானம் என்ற வகையிலே, என்னுடைய ஆழ்ந்த இரங்கலை அவருடைய குடும்பத்தாருக்கு, உற்றார் உறவினருக்கு, அந்தத் தொகுதி மக்களுக்கு, அவர் சார்ந்த இயக்கமான தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு, அதன் தலைவருக்குத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பேரவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கலோடு, என்னுடைய இரங்கலையும், பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுமுகத்தான், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, சிறிது நேரம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காத்தனர்.)

மறைந்தவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன. பேரவை மீண்டும் நாளை (31-3-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை காலை 10-28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

103. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

104. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

105. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிர்வாக அறிக்கை. (1948 ஆம் ஆண்டு மின்சாரச் (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 (1) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |

220164

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.